
அன்பே சிவம்
மனமே குரு
குரு உலகிற்காக கூறிய தத்துவங்கள்.


அன்பே சிவம்
மனமே குரு
இறைவனுக்கு இரவு இல்லை,
பகல் இல்லை,
இன்பமும் இல்லை,
துன்பமும் இல்லை,
பசி இல்லை,
பட்டினி இல்லை,
பாசம் இல்லை,
தூக்கம் இல்லை,
இவை அனைத்தையும் கடந்து
நின்றவனே கடவுள் ஆகிறான்


அன்பே சிவம்
மனமே குரு
முதலில் உன்னைத் தேடு,
கடவுளை தேடாதே
நீ யார் என்று தெரிந்தால்
கடவுள் யாரென்று
தெரிந்து விடும்.


அன்பே சிவம்
மனமே குரு
முயற்சி உன்னுடையது
நீ முயற்சி செய்து கொண்டே இரு,
முடிவு அவனுடையது
உனக்கேற்ற வெகுமானம்
ஒருநாள் கிடைத்தே தீரும்.


அன்பே சிவம்
மனமே குரு
மனிதன் என்பவன்
கொடுத்து வாழ்பவன்,
எடுத்து வாழ்ந்தால்
அவன் பெயர் மிருகம்.


அன்பே சிவம்
மனமே குரு
அனைவருமே ஒரு வாழ்வு வாழ்வார்கள்
ஆனால் நாம் இரு வாழ்வு வாழவேண்டும்,
அது என்னவென்றால்
இறைவனை ஒரு கையில் பிடி,
குடும்பத்தை ஒரு கையில்பிடி
ஒரு சூழ்நிலையில் குடும்பம்
உங்களை கைவிடும்
அப்பொழுது இரண்டு கைகளிலும்
இறைவனைப் பற்றிக்கொள்ள வேண்டும்


அன்பே சிவம்
மனமே குரு
கண்ணில் படும் காட்சிகள் எல்லாம் பொய்,
கண்ணில் படாத காட்சியே மெய்
அம்மா,அப்பா, அண்ணன் ,தம்பி
எல்லாமே பொய்
இறைவன் மட்டும்
தான் உண்மை.


அன்பே சிவம்
மனமே குரு
அனைவரும் வாருங்கள்
நாம் அனைவரும் இறைவனிடம் செல்வோம்
இறைவனை நோக்கி
நீ ஒரு அடி எடுத்து வைத்தால்
இறைவன் உன்னை நோக்கி
நான்கு அடி எடுத்து வைப்பார்.


அன்பே சிவம்
மனமே குரு
பற்று எல்லோரின் மீது வைக்காதே
உன் மீது பற்று வை ,
அதுதான் உண்மையான பற்று
அது தான் உன்னை இறைவனிடம் சேர்க்கும்,


அன்பே சிவம்
மனமே குரு
கோயில் கட்டியது ஏன் என்றால்
மகான்கள் யோகப்பயிற்சியில்
இருக்கும் போது கண்ட
காட்சிகளை சிலையாக
வடித்து வைத்தனர் ,
அதை தான் இன்று கோவிலில் வழிபட்டு வருகின்றனர்,
கோவில் இருப்பது
தெய்வத்தின் சிலை அல்ல
மனிதனின் சிலை தான்,
மனிதர்களிடம் இருக்கும்
குணங்கள் தான் சிலையில்
காட்டப்பட்டுள்ளது.


அன்பே சிவம்
மனமே குரு
இறைவனை
இளமையிலேயே தேடு,
முதுமையில் தோன்றினால்
அது மரண பயம்.


அன்பே சிவம்
மனமே குரு
மனிதர்களில் யாரும்
உயர்ந்தவரும் இல்லை,
தாழ்ந்தவரும் இல்லை.


அன்பே சிவம்
மனமே குரு
உங்கள் தெருவில்
நீங்கள் பணக்காரனாக இருக்கலாம்
மற்றொரு தெருவில்
மற்றொருவர் பணக்காரன்
இதில் யார் பணக்காரன்
அனைவரையும் விட
இறைவன் ஒருவனே பணக்காரன்.


அன்பே சிவம்
மனமே குரு
உலகில் காட்டப்படும்
மனிதர்கள் யாரும் விஐபி இல்லை,
இறைவன் ஒருவனே விஐபி
மற்றும் நிரந்தரமான விஐபி
இறைவன் ஒருவனே.


அன்பே சிவம்
மனமே குரு
ஒவ்வொரு மனிதனும் தோல்வி
அடைந்துதால் தான் வெற்றியை
நோக்கி பயணம் செல்வான்,
தோல்வி அடையவில்லை என்றால்
முயற்சி என்பது ,இருக்காது
எத்தனை முறை தோல்வி அடைகிறானோ
அடுத்தடுத்த படிகளை
எடுத்து வைத்துக் கொண்டே இருப்பான்,
தோல்வி என்பது இல்லை என்றால்
வெற்றிக்கான மதிப்பே இருக்காது.


அன்பே சிவம்
மனமே குரு
ஒவ்வொரு மனிதனும்
அவமானத்தை மறக்கவே கூடாது,
நான் ஏன் அவமானப்பட்டேன்?
எதற்காக அவமானப்பட்டேன் ?
என்று சிந்தித்துக் கொண்டே இருங்கள்
அந்த சிந்தனை உங்களை
மேலே தூக்கி வைக்கும்.


அன்பே சிவம்
மனமே குரு
ஆன்மீகவாதிகள் ஆசையானது
இறைவனின் மீது மட்டுமே இருக்க வேண்டுமே,
தவிர வேறு பொருளின் மீது
ஆடை ஆபரணத்தின்
மீது இருக்கக் கூடாது.


அன்பே சிவம்
மனமே குரு
அனைவரின் வாழ்க்கையும்
அவர்கள் கையில்தான் உள்ளது,
ஆனால் அவர்களின் உயிர்
இறைவனுடைய கையில் உள்ளது.


அன்பே சிவம்
மனமே குரு
இறைவனிடம் சென்று
வியாபாரம் செய்யாதே
ஏனென்றால் படைத்தவன் அவன்
என்ன எப்போது கொடுக்க வேண்டும்
என்று அவனுக்கு தெரியும்,
நீ கேட்டால் உடனே கொடுக்கவும் மாட்டான்,
நீ வேண்டாம் என்று சொன்னால்
உனக்கு வருவதை தராமல் இருக்க மாட்டான்
எது எப்போது தரவேண்டும்
என்று அவனுக்கு தெரியும்,
நீ கேட்டவுடன்
அனைத்தும் கிடைத்து விட்டால்
இறைவனுக்கு மதிப்பே இருத்தாது.


அன்பே சிவம்
மனமே குரு
இறைவன் வேறவாக இருக்கலாம்
மதங்கள் வேறவாக இருக்கலாம்
ஆனால் வழிபாடு ஒன்றே
எவனாக இருந்தாலும்
புட்டத்தை மேல் நோக்கி
தலையை கீழ் வைத்து
தான் வணங்க வேண்டும்..


அன்பே சிவம்
மனமே குரு
எப்படிப்பட்ட மகன்களாக
இருந்தாலும் அவர்கள்
பேரொளியிலிருந்து வந்தவர்கள்
மறுபடியும் போய்
அந்தப் பேர் ஒளியில்
தான் இணைய வேண்டும்


அன்பே சிவம்
மனமே குரு
கடவுள் வழிபாடு என்பது
தானாக சென்று
வழிபட வேண்டுமே தவிர
கட்டாயப்படுத்தி வழிப்பட வைக்க கூடாது.
அது தெய்வ வழிபாட்டுக்கு ஆகாது,
அப்படி வற்புறுத்தி
ஒருவரை வழிபட வைத்தால்
அது கடவுள் வழிபாடு அல்ல
மத வழிபாடு.

அன்பே சிவம் மனமே குரு



நல்லது கெட்டது
இயற்கையில் கிடையாது
எல்லோருக்கும் ஒரே மாதிரி தான்,
காற்று நீ உயர்ந்த ஜாதி
உனக்கு வெயில் அடிக்காது,
நீ தாழ்ந்த ஜாதி
உனக்கு காற்று அடிக்காது
என்று காய்கிறதா ,
உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி
அனைத்தும் மனிதனின்
மனதில் தான் இருக்கிறது
கடவுளுக்கும் ஜாதிக்கும்
சம்பந்தமே இல்லை.

அன்பே சிவம் மனமே குரு



மரணம் என்பது
நீயாக தேடிச் செல்லக்கூடாது
அதுவாக செல்ல வேண்டும்,
ஒருவன் கடன் விஷயத்தில் தற்கொலை
அல்லது காதல் விஷயத்தில்
தற்கொலை
திருட்டு விசயத்தில் தற்கொலை
செய்து கொண்டால்,
மறுபடியும் பிறந்து
அதே செயலைத்தான் செய்வான்.
அந்த நினைவுதான் பிறப்பு,
இந்த பிறப்பு தான் செயல்
அந்த செயல்தான்
துன்பத்தின் அடிப்படை
மரண காலத்தில் அவனது
நினைவுகளே மறுபிறவியில்
செயலாக மாறுகின்றது.


அன்பே சிவம்
மனமே குரு
சற் குரு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமி
அவர்கள் இறைவன் எப்படிப்பட்டவர்
என்று கூறுகிறார்.
இல்லாத ஒன்று இருந்து கொண்டு
இயக்கிக் கொண்டு இருப்பது
எதுவோ அதுவே கடவுள்.